விலை ரூ. 50 பக்கங்கள் 12

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 111

வெள்ளிக்கிழமை 17 மார்ச் 2023 பங்குனி 03 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"உந்தக் கோரிக்கையைத்தானே காலம் முழுக்க சொல்லிக்கொண்டே இருக்கிறம்"



இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் போல் ஸ்டீபன்ஸ்



இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ்

# அரசின் பௌத்தமயமாக்கலை தடுக்கவேண்டும் சர்வதேசம்!

## ஆஸி, கனடா தூதுவர்களிடம் தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 17

தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு – கிழக்கை பௌத்த – சிங்கள மயமாக்கும் நோக்குடன் அரசு செயற்படுகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காமல் அரசு இழுத்தடிக்கின்றது. இந்த விடயங்களில் இலங்கை அரசுக்குச் சர்வதேச நாடுகள் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கவேண்டும். »11

## தவிசாளர்களின் வாகனங்களை மீளப்பெறுக!

சாவகச்சேரி, மார்ச் 17

உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் பொறுப்பிலுள்ள சபை உடைமைகள் மற்றும் வாகனங்களை உடனடியாக மீளப் பெறவேண்டும் என்று சபைகளின் செயலாளர்களுக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதியுடன் உள்ளூராட்சிச் சபைகளின் ஆயுட்காலம் முடிவடையும் நிலையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.(எ-9)

## சரியும் ரூபா

கொழும்பு, மார்ச் 17

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நேற்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவுப் பெறுமதி 329.02 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி »11

## ஒப்புக்கொண்ட திகதியில் வாக்குச்சீட்டுக்கள் வராது!

### கைவிரித்தது அரச அச்சகத் திணைக்களம்

### தள்ளிப்போகின்றதா தேர்தல்?

கொழும்பு, மார்ச் 17

நிதி கிடைப்பனவில் தாமதம் காணப்படுவதால் தபால்மூல வாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் வாக்குச்சீட்டுக்களை ஒப்படைக்க முடியாது.

- இவ்வாறு அரச அச்சகத் திணைக்களம் தேசிய தேர்தல் »11

## மத்திய வங்கியின் தீர்மானங்கள் சரியானவையே!

### ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17

இலங்கை மத்திய வங்கி தவறான தீர்மானங்களை எடுப்பதில்லை. சரியான தீர்மானங்களையே »11

## மருந்துத் தட்டுப்பாடு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 17

அரச மருத்துவமனைகளில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்பில் இலங்கை மனித »11



## சீனச்சட்டி உலக்கைக்கு தங்கமுலாம் பூசி மோசடி

### முல்லைத்தீவில் இருவர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 17

உரல், உலக்கை போன்றவற்றுக்குத் தங்க முலாம் பூசி பழமையான பொருள்கள் என்று ஏமாற்றி விற்க முயன்ற குற்றச்சாட்டில் இருவர் முல்லைத்தீவில் கைது செய்யப்பட்டுள்ளனர். »11

## கணக்கு அறிக்கைகளை கோரும் தேர்தல் ஆ.குழு!

கொழும்பு, மார்ச் 17

அனைத்து பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும் 2021ஆம் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்க நேற்று முதல் 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே இந்தத் தீர்மானங் »11

## புதனன்று கடமைக்கு வராத ஆசிரியர்களிடம் விளக்கம்?

யாழ்ப்பாணம், மார்ச் 17

நேற்றுமுன்தினம் தொழிற்சங்க நடவடிக்கையில் பங்குகொண்ட ஆசிரியர்களிடம் யாழ். புறநகர் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்று »11

## உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் தவறிய அரச திணைக்களங்களுக்கு எதிராக மனு

கொழும்பு, மார்ச் 17

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய அரச திணைக்களங்கள் பல வற்றை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுக்க உயர்நீதிமன்றம் »11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பௌத்த இளைஞர் சங்கம் 13பிளஸ் தீர்வுக்கு ஆதரவு

## விக்கினேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 17
13 பிளஸ் தீர்வுக்கு ஆதரவு வழங்குவதாக பௌத்த இளைஞர் சங்கம் தெரிவித்துள்ளது என்று வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகமொன்றுக்கு விக்கினேஸ்வரன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதியின் யாழ்ப்பாணப் பயணத்தின்போது 13ஆவது தீர்வை நடைமுறைப்படுத்துமாறு நான் அவரிடம் கோரிக்கை விடுத்தேன். அதற்கு அவரும் சம்மதம் தெரிவித்தார். ஆனால், பௌத்த மகா சங்கத்தினர் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். எனினும், ஜனாதிபதி 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதைக் கைவிட்டுவிட்டார் என்று நான் நினைக்கவில்லை. எதிர்ப்புக் காரணமாக தனது திட்டத்தை சற்றுத் தாமதப்படுத்துகின்றார் என்றே நினைக்கிறேன்.
அண்மையில் பௌத்த இளைஞர் சங்கத்தினர் தாங்கள் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர். எனது நிலைப்பாடும் அவர்களது நிலைப்பாடும் ஒன்றாகவே காணப்படுகிறது. பௌத்த பிக்குமார் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்கள் தேசிய இனப்பிரச்சினைகளில் அல்லது இனப்பிரச்சினையில் தலையிடுவதில் தவறில்லை.
நான் அண்மையில் மகாசங்கத்தினருக்கு திறந்த கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன். 13 பற்றி போதிய தெளிவின்மையாலேயே மகாசங்கத்தினர் 13க்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என நினைக்கிறேன். நான் அவர்களுக்கு 13 பற்றி விளக்கமளிக்க தயாராக உள்ளேன் - என்றார். (ம)

# 2022ஆம் ஆண்டில் இலங்கைப் பொருளாதாரம் ஒப்பீட்டளவில் பெருவீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 17
இலங்கையின் பொருளாதாரம் 2022ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டை விட 7.8 வீதம் சுருங்கியுள்ளது என்று சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அந்தத் திணைக்களத்தால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
2022ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் அதற்கு முன்னைய ஆண்டை விடவும் 7.8 வீதம் சுருங்கியுள்ளது. அத்துடன் கடந்த வருட இறுதிக் காலாண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 12.4 வீதம் சுருங்கியுள்ளது. இந்த வருடமும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3 வீதம் சுருங்கும். எனினும், 2024ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சிப் பாதையைப் பதிவுசெய்யும் - என்றுள்ளது.
சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி கிடைத்த பின்னர், இலங்கை ரூபாவைப் பலப்படுத்தவும், வட்டி வீதங்களைக் குறைக்கவும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தவும் முடியுமென ஆசிய செய்யூரிட்டீஸ் நிறுவனம் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஈழத்தமிழருக்கு ஆதரவாகக் கருத்து தமிழக அதிகாரிக்கு ஊதியக்குறைப்பு

## பேராணை மனுவில் தலையிட மேல் நீதிமன்றமும் மறுப்பு

கொழும்பு, மார்ச் 17
இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்ட தமிழக வருவாய்த்துறை அதிகாரி ஒருவருக்கு ஊதியக் குறைப்பு உள்ளிட்ட 'திணைக்கள' ரீதியிலான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக அந்த அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட பேராணை மனுவில் தலையிடுவதற்கு சென்னை மேல் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.
இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை ஏழு நாள்கள் உணவுத்தவிர்ப்பை மேற்கொண்டமை மற்றும் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை எதிர்த்து காங்கிரஸின் தலைவருக்குக் கடிதம் எழுதியமை தொடர்பில், இந்திய வருவாய் சேவை அதிகாரியான ஜி.பாலமுருகனுக்கு எதிராகத் திணைக்கள ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இதற்கு ஆதரவாக, கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் 3ஆம் திகதி மத்திய நிர்வாக தீர்ப்பாயம் அவருக்கு மூன்று ஆண்டுக்கு மூன்று தடவைகளாக ஊதியக்குறைப்பு உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இதனையடுத்து மனுதாரரான பாலமுருகன், குடியரசுத் தலைவருக்கு இரண்டு முறை விண்ணப்பித்தும் பதில் கிடைக்கவில்லை.
எனவே, குறித்த தீர்ப்பாய உத்தரவை எதிர்த்து அவர், நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்திருந்தார். நேற்று முன்தினம் மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதிமன்ற விசாரணையின்போது, அரச ஊழியராக இருந்தும், அரசின் கொள்கைகளை விமர்சித்த மனுதாரரின் நடத்தையைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளமுடியாது என்று அரச தரப்பு தனது வாதத்தில் தெரிவித்துள்ளது.
இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தாம் தனிப்பட்ட கருத்தைக் கொண்டிருந்தாலும் அரச ஊழியர் என்ற அடிப்படையில் அவர் தமது கருத்துக்களைக் கட்டுப்படுத்தியிருக்கவேண்டும் என்றும் அரசதரப்பு சட்டத்தரணிகள் வாதத்தை முன்வைத்துள்ளனர்.
இந்தநிலையில் இரண்டு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த சென்னை மேல் நீதிமன்றம் வருவாய்த்துறை அதிகாரியின் மனுவைத் தள்ளுபடி செய்தது. (ம)

# துப்பாக்கி திருட்டு: 2 படையினர் கைது

கொழும்பு, மார்ச் 17
பனாகொட இராணுவ முகாமின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய இராணுவச் சிப்பாய்க்கு வழங்கப்பட்ட துப்பாக்கியும் 90 தோட்டாக்களும் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், இராணுவச் சிப்பாய் ஒருவரும் முன்னாள் இராணுவ அதிகாரியொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் எதற்காகத் துப்பாக்கியைத் திருடினார்கள், இதன் பின்னணியில் ஏதும் சதி நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றனவா? என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# பணியைப் புறக்கணிக்காத ஊழியர்களுக்குப் பாராட்டு

## சுகாதாரஅமைச்சு ஏற்பாடு

தொழில்வல்லுநர்களால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவளிக்காது நோயாளர்களின் நலன்கருத்தி செயற்பட்ட சுகாதார சேவையாளர்களுக்கு பாராட்டு நிகழ்வு நடத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் ஆலோசனைக்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பில் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில்,
அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற அத்தியாவசிய துறைசார் தொழிற்சங்கங்களால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.
குறிப்பாக மருத்துவமனைகளுக்குச் சென்ற நோயாளர்களுக்கு இந்த வேலைநிறுத்த போராட்டம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. ஒரு சில தொழிற்சங்கங்கள் இந்தப் பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவளிக்காத போதிலும் பெரும்பாலான தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் கலந்துகொண்டன.
இந்தநிலையில் சுகாதார சேவையாளர்கள் போராட்டத்துக்கு ஆதரவளிக்காது நோயாளர்களின் நலன்கருதி செயற்பட்டனர். இவர்களுக்கே பாராட்டு நிகழ்வு இடம் பெறவுள்ளது. பணிப்புறக்கணிப்பின்போது கடமையில் இருந்த மருத்துவர்கள், சிற்றூழியர்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்படுகின்றன - என்றுள்ளது. (ச-இ)

# ஸ்கொட்லாந்தைப் போன்றதாக தமிழருக்கு அதிகாரப்பகிர்வுகள்

## சாணக்கியன் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 17
ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தில் உள்ளது போன்று தமிழ் மக்களுக்கும் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஸ்கொட்லாந்தில் வைத்து வலியுறுத்தினார்.
இரா.சாணக்கியன் உள்ளிட்ட இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஸ்கொட்லாந்துக்கு விஜயம் செய்துள்ளது.
ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை நாடாளுமன்றத்தால் எவ்வாறான பாடங்களைக் கற்றுக்கொள்ளமுடியும் என்பது குறித்து இந்தப் பயணத்தின்போது ஆராயப்படுகின்றது.
ஸ்கொட்லாந்து நாடாளுமன்ற உறுப்பினரை சாணக்கியன் எம்.பி. தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்திவருகின்றார். இதன்போதே ஸ்கொட்லாந்தை மாதிரியாகக் கொண்டு தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்று சாணக்கியன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.
எதிர்காலத்தில் ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசவுள்ளதாக ஸ்கொட்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது சாணக்கியனிடம் உறுதிமொழி வழங்கினார். அத்துடன், இலங்கைக்கு விஜயம் செய்யும் போது தமிழ்த் தரப்பினரை சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அவர் சாணக்கியனிடம் தெரிவித்தார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத தொழில்களுக்கு அனுமதியளிக்கிறார் டக்ளஸ்

## வடமராட்சி கூ. சங்க சமாசத்தின் முன்னாள் உபதலைவர் ஆதங்கம்

**யாழ்ப்பாணம், மார்ச் 17**

**சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகள் தற்போது வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டு வருவதால் பாரம்பரிய தொழில்கள் பாதிப்பை எதிர்கொள்கின்றன. இதற்கு அனுமதித்த கடற்றொழில் அமைச்சர் சட்டவிரோத தொழிலுக்குரிய அமைச்சரா? என எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறு வடமராட்சி வடக்கு, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

சட்டவிரோதமான அனைத்து தொழில்களுக்கும் கடற்றொழில் அமைச்சர் அனுமதி வழங்குகின்றார். அவரால் ஏன் அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை?

அண்மையில் பள்ளிக்குடாவுக்கு சென்றிருந்த கடற்றொழில் அமைச்சர் பெரும்பான்மையின மக்கள் எதை விரும்புகிறார்களோ அதனையே தான் நடைமுறைப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

சுண்டிக்குளம் பூனைத்தொடுவாய் ஆகிய பகுதிகளில் எந்த அனுமதியையும் பெறாது தனிநபர் ஒருவர் கொட்டில் அமைத்து அட்டைப் பண்ணையை மேற்கொள்ள முனைகிறார். அவருக்கு அனுமதி வழங்கியது யார்?

இத்தகைய சட்டவிரோத தொழில்களால் மீன்பெருக்கம் தடைப்படுவதுடன் பாரம்பரிய மீன்பிடித் தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் வாழ்வாதாரமும் இழக்கப்படுகிறது.

இதனைக் கருத்திற்கொள்ளாது கடற்றொழில் அமைச்சர் சட்டவிரோத தொழில்களுக்கு துணைபோகின்றார். இத்தகைய செயற்பாடுகள் அவரை சட்டவிரோத தொழிலுக்குரிய அமைச்சரா? எனக் கருத தோன்றுகிறது - என்றார். (ச-இ)

---

*மைதானத்தில்*

## பார்வையாளர்கள் மோதல்; மூவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, மார்ச் 17

விளையாட்டு மைதான பார்வையாளர் பகுதியில் இடம்பெற்ற மோதலில் மூவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மட்டுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கரப்பந்தாட்ட வீரர்களை உள்ளடக்கிய கரப்பந்தாட்டப் போட்டிகள் மட்டுவில் மைதானத்தில் இடம்பெற்றன.

போட்டியின் முதல் நாளன்று இரு அணிகள் விறுவிறுப்பாக மோதிக்கொண்ட நிலையில் பார்வையாளர்கள் சிலர் நையாண்டிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அதனையடுத்து ஒருவர் அவ்வாறு செய்யாதீர்கள் எனக் கூறியபோது அவரை மற்றையவர்கள் மோசமாகத் தாக்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-9,131)

---

## அபிவிருத்திக் கலந்துரைகளில் திருநர்களும் பங்கேற்க ஏற்பாடு

*வடக்கு ஆளுநர் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், மார்ச் 17

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடல்களில் மூன்றாம் பாலினத்தவர்களின் பங்கேற்றலை உறுதி செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோருவேன் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

யாழ். மத்திய கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சர்வதேச மகளிர் தினம் இடம்பெற்றது.

நிகழ்வு மேடையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு மாகாண ஆளுநரிடம் மூன்றாம் பாலினத்தவர்கள் மனுவொன்றைக் கையளித்தனர். இதுகுறித்து ஆளுநரிடம் ஊடகவியலாளர்களால் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இங்கு மட்டுமல்ல நாடு முழுவதும் காணப்படும் மூன்றாம் பாலினத்தவர்கள் தமது உரிமைகள் - பிரச்சினைகள் சார்ந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.பொதுப்போக்குவரத்தில், அரச அலுவலகங்களில் பொது இடங்களில் என பல இன்னல்களை நாம் எதிர்நோக்கி வருகின்றோம்.

எமது பிரச்சினைகளை களைவதற்கு மாவட்ட அபிவிருத்திக் கலந்துரையாடல்களில் தமது பிரதிநிதிகளையும் உள்ளீர்க்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

அவர்கள் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு மாவட்டங்களில் இடம்பெறும் அபிவிருத்தி கலந்துரையாடலில் அவர்கள் உள்ளீர்க்கப்படுவது சிறந்ததொன்றாகும். இதுதொடர்பில் ஜனாதிபதியுடன் பேசி தீர்மானம் ஒன்றை எட்டுவேன் - என்றார். (ச)

---

## யாழ். - கொழும்பு விமானசேவை விரைவில் ஆரம்பிக்க ஆராய்வு

*தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,மார்ச் 17

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் - கொழும்பு விமான சேவையை ஆரம்பிப்பதற்கு ஆராயப்பட்டு வருகின்றது என யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தெரிவித்தார்.

யாழ். இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கும் தமிழ் நாட்டுக்குமான சேவைகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன. விமான நிலையத்தின் சேவைகள் ஆரம்பித்த பின்னர் இந்தியாவிலிருந்து பல்வேறு துறை சார்ந்த கலைஞர்களை யாழ்ப்பாணம் வரவழைக்கப்பட்டு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதன் மூலம் யாழ்ப்பாண மக்களுக்கும் தொப்புள் கொடி உறவான தமிழக மக்களுக்கும் இடையிலான கலை கலாசாரங்களை பகிர்ந்து கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

மேலும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக தென்னிந்தியாவின் ஏனைய நகரங்களுக்கும் சேவையை விஸ்தரிப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். மேலும் யாழ்ப்பாணம் - கொழும்பு விமான சேவையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம் - என்றார். (ச)

---

## மாணவரை ஏற்றாது செல்லும் காரணத்தை தெளிவுபடுத்துக!

*மனித உரிமைகள் ஆணைக்குழு போக்குவரத்துசபைக்கு அறிவுறுத்து*

யாழ்ப்பாணம், மார்ச் 17

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பனிக்கன்குளம் மற்றும் கிழவன்குளம் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை பேருந்துகள் ஏற்றாது செல்வதால் வீதியில் மாணவர்கள் அந்தரிக்கும் நிலைமை குறித்து இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியம் கவனம் செலுத்தியுள்ளது.

அதன்பிரகாரம் வடக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபை மற்றும் தனியார் போக்குவரத்துசபை ஊழியர்கள் விளக்கமளிக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:

'பேருந்துகள் ஏற்றாது செல்வதனால் வீதியில் அந்தரிக்கும் மாணவர்கள்' எனும் தலைப்பில் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

செய்திகளில் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் பனிக்கன்குளம் மற்றும் கிழவன்குளம் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை ஏ-9 வீதியில் பயணிக்கும் பேருந்துகள் ஏற்றாது செல்வதால் மாணவர்கள் பரீட்சைக்குச் செல்ல முடியாதநிலை தோன்றியது எனத் தெரிவிக்கப்பட்டது.

இ.போ.ச. அதிகாரிகளால் மாணவர்களை பருவகாலச் சிட்டை பெறுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. மாணவர்கள் பருவகால சிட்டையைப் பெற்றும் எந்தவித முன்னேற்றமும் இல்லை. மாறாக பருவகால சிட்டை பெற்றபின்னர் பேருந்துகள் தம்மை ஏற்றாமல் செல்வதே அதிகரித்துள்ளது என்று மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வீதியை மறித்து மக்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இத்தகைய சம்பவங்கள் ஏனைய போக்குவரத்துப் பாதைகளிலும் இடம்பெற்று வருவதை அறியமுடிகிறது.

எனவே மேற்குறித்த சம்புவங்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (ச)

---

*நீதிமன்ற வழக்கின்போது*

## எதிராளியின் கன்னத்தில் அறைந்தவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 17

நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது எதிராளியைக் கன்னத்தில் அறைந்த சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அச்சுவேலி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்று மல்லாகம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது எதிராளி சாட்சியளித்துவிட்டு வருகையில் சந்தேகநபர் எதிராளியின் கன்னத்தில் அறைந்துள்ளார்.

நீதிவான் முன்னிலையில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள் நீதிமன்றை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவர் மீது வழக்குப் பதிவுசெய்து எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் அச்சுவேலி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ஆவரங்கால் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூகுளில் கிம்மின் பெயர் தேடியவர் சுட்டுக்கொலை

பியாங்காங், மார்ச் 17

வடகொரியா அதிபர் கிம் ஜோங் உன் பெயரை கூகுளில் தேடியதால் புலனாய்வு அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படு கிறது.

வடகொரியா எப்போதுமே தனக்கென மிகவும் கட்டுப்பாடான விதிமுறைகளை வைத்திருக்கும் நாடாகும். யாரேனும் விதிகளை மீறினாலோ, இல்லை அரசுக்கு எதிரான காரியங்களை செய்தாலோ கடுமையான தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவர். அந்த நாட்டில் மரண தண்டனை கூட சர்வ சாதாரணம்.

அந்தவகையில் தற்போது வடகொரியா நாட்டின் தலைவர் கிம் ஜாங்உன் பெயரை கூகுளில் தேடிய புலனாய்வு அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தனக்கு கொடுக்கப்பட்ட இணைய சேவைகளை அதிகாரத் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## எலிகளுக்கு கொரோனா

நியூயோர்க், மார்ச் 17

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் சுற்றித் திரியும் எலிகளுக்கு கொரோனோத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் சுற்றித் திரியும் எலிகளுக்கு கொரோனோ பரிசோதனை அண்மையில் நடத்தப்பட்டது.

மொத்தமாக 79 எலிகளுக்கு நடத்தப்பட்ட சோதனையில் 16 எலிகளுக்கு அல்பா, டெல்டா, ஒமிக்ரோன் வகை உருமாறிய கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ச-இ)

## உக்ரைனுக்கு எதிராக சைபர் தாக்குதல்

### புதுவியூகம் வகுக்கும் ரஷ்யா

மொஸ்கோ, மார்ச் 17

உக்ரைனுக்கு எதிராக புதிய தாக்குதலில் ரஷ்யா களமிறங்கியுள்ளது.

அதற்கமைய ரஷ்ய ஹேக்கர்கள் புதுப்பிக்கப்பட்ட சைபர் தாக்குதல் அலைகளை உக்ரைனுக்கு எதிராகத் தயாரித்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.



இதுகுறித்து மேற்கத்திய பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகையில்,

கிழக்கு உக்ரனிலுள்ள போர்க்களத்துக்கு ரஷ்யா புதிய துருப்புக்களை அறிமுகப்படுத்தி வருவதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இது இராணுவ நடவடிக்கைக்ளை இணையைக்கும் நுட்பங்களுடன் இணைக்கும் தந்திரமாக பிரதிபலிக்கிறது. அத்துடன் அதிநவீன ரஷ்ய ஹேக்கிங் குழு, உக்ரைனின் விநியோக வரிகளில் முக்கியமான செயற்பாடுகளை ரத்து செய்து உக்ரைனுக்கு வெளியே உள்ள நிறுவனங்கள் மீதான அழிவுகர தாக்குதல்களில் ஈடுபடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. பொதுவாக ஹேக்கர்கள் ஒரு நிறுவனத்துக்குள் ஊடுருவி தரவை குறியாக்கம் செய்து அணுகலை மீண்டும் பெறப் பணம் செலுத்துவதற்காக மிரட்டி பணம் பறிப்பதை உள்ளடக்குகிறது.

இவ்வாறு உக்ரைன் நிறுவனங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் இரண்டு வகையான மாறுபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

அத்துடன் உக்ரைன் இராணுவ சொத்து மீது அழிவு மற்றும் உளவுத்தகவல்கள் சேகரித்தல் ஆகியவற்றில் திறன்களை அதிகரிப்பதற்கு இணைய அச்சுறுத்தல் செயற்பாட்டை ரஷ்யா சரிசெய்து வருகிறது எனவும் தெரிய வருகிறது - என்றனர். (ச-இ)

### போதையின் உச்சம்

## இளைஞர் வயிற்றில் மதுபானப் போத்தல்

காத்மண்டு, மார்ச் 17

26 வயதுடைய இளைஞர் ஒருவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அவரது வயிற்றிலிருந்து மதுப் போத்தல் ஒன்றை மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

இந்த அதிர்ச்சிச் சம்பவம் நேபாளத்தில் ரவுதஹத் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த இளைஞர் கடுமையான வயிற்றுவலியால் மருத்துவமனைக்கு சென்ற நிலையில் மருத்துவப் பரிசோதனையில் போத்தல் அவர் வயிற்றில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் இரண்டு மணிநேர சத்திரசிகிச்சையின்பின் இளைஞரின் வயிற்றிலிருந்து மதுபோத்தல் அகற்றப்பட்டுள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டபோது, மதுபோதையில் நண்பர்களிடம் சவால்விட்ட குறித்த இளைஞர் மலக்குடல் வழியாக மதுபோத்தலை உள்ளே செலுத்தியுள்ளார்.

அதன்பின்னர் மதுபோதையில் அவர் அதனை மறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மதுப்போத்தல் உடையாததால் அவருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது. (ச-இ)

## அமெரிக்காவின் சிலிக்கன் வங்கி திவாலானது

### அதிர்ச்சியில் சர்வதேச நிறுவனங்கள்

வொஷிங்டன், மார்ச் 17

அமெரிக்காவின் மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றான சிலிக்கன் வங்கி திவாலானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளைக் கிளப்பியுள்ளது.

அமெரிக்காவின் 16ஆவது மிகப்பெரிய வங்கியாக இருந்த சிலிக்கன் வங்கி, சுருக்கமாக எஸ்.வி.பி என அழைக்கப்படும் இந்த வங்கி போதிய நிதி இல்லாததால் கடந்தவாரம் வெறும் இரண்டே நாள்களில் திவாலாகியுள்ளது.

இதனால் அந்த வங்கியில் வைப்புச் செய்த நிறுவனங்கள் சிக்கலுக்குள்ளாகியுள்ள நிலையில் வேகவேகமாக வங்கியிலிருந்து வெளியேறி வருகின்றன. அதனால் அதன் பங்குகள் 85 சதவீதம் சரிந்த நிலையில் திவாலாகி படுத்தேவிட்டது. இந்நிலையில் வங்கி நெருக்கடி தற்போது கட்டுக்குள் இருப்பதாக நாட்டு மக்களுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நம்பிக்கை அளித்துள்ளார். சிலிக்கன் வங்கியில் முதலீடு செய்தவர்களுக்குப் பணம் திரும்பக் கிடைக்கும், அதனை அமெரிக்க அரசாங்கம் பொறுப்பேற்கும் என்றும் பைடன் கூறியுள்ளார்.

இதேவேளை இந்த வங்கியின் வீழ்ச்சி உலகப் பொருளாதாரத்தில் தாக்கத்தைச் செலுத்தும் எனவும் பொருளாதார நிலையில் அமெரிக்காவுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு திடீர் பண வரவுக்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் இடையூறுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** ஆதரவு உற்சாகம் தரும். திடீர் செலவு கள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியாக முடியும். காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை தொடங்குவது நல்லது. உடல் அசதி உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை லாபம் தரும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்து விடும். குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் பெறவும் வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத் தில் சற்று கவனம் தேவைப்படும். சிலருக்கு செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். அலைச்சலும் சோர்வும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாளொரு நல்வார்த்தை

"பறக்கவேண்டும் என்று முடிவெடுத்துவிட்டால், முதலில் உங்கள் சுமையை வீசியெறியுங்கள்" – புத்தர்

## இளையோரை வழிநடத்தும் பொறுப்பு யாருடையது?

மாணவர்கள் மத்தியில் உயிர்கொல்லி போதைப் பாவனை விதைக்கப்பட்டது. அதன் விளைவாக பல்வேறு கலாசார சீரழிவுகள் உருவாகின. அதற்குப் புறம்பாக இன்றைய இளம் சமூகம் திறந்தவெளியில் இணையத்தாலும் பல்வேறு அழிவுகளை எதிர்கொள்கின்றது. எதிர்காலச் சந்ததியை திட்டமிட்டுச் சீரழிக்கும் நிகழ்ச்சி நிரல் அதிதீவிரத்தனமாக திரைமறைவில் முன்னெடுக்கப்படுகின்றது. ஓர் இனத்தை அழிப்பதற்கான கைங்கரியம் வெவ்வேறு வடிவங்களில் அரங்கேறிக்கொண்டிருந்தாலும் அதைப்பற்றி எமது சமுதாயம் விழிப்படைந்ததாகத் தெரியவில்லை.

எமது பெற்றோரின் மிகப்பெரிய பலவீனமே மாணவர்களின் எதிர்காலத்தைப் பாழடிக்கின்றது. பிள்ளைகள்மீது பெற்றோர் நம்பிக்கை வைக்கத்தான்வேண்டும். அந்த நம்பிக்கையே தமது பிள்ளையின் எதிர்காலத்தை சீரழிப்பதற்கான அத்திபாரமாக அமைந்துவிடக்கூடாது.

'என்ர பிள்ளை அப்படிச் செய்யமாட்டான் அல்லது செய்திருக்கமாட்டான்' என்ற பெற்றோரின் குருட்டு நம்பிக்கை அவர்களது பிள்ளைகளின் எதிர்காலத்தையே தொலைக்கச் செய்கின்றது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் வேறுவேறு புறக்காரணிகளால் மன அழுத்தம் அதிகரிக்கின்றது. அவர்களுக்கு மன அழுத்தத்தை உண்டுபண்ணும் காரணிகள் எதுவாக இருந்தாலும் அதைத் தீர்ப்பதற்கான வழி என்ன? என்பதைக் கண்டறிந்து களையவேண்டியது பெற்றோரினதும், ஆசிரியர்களினதும் தலையாய் கடமை. இன்றைய இளையசமுதாயம் தன்னுடைய உலகத்தை தனக்குள் மட்டுமே அகமுகியாக சுருக்கிக்கொள்ளத் தொடங்கிவிட்டது. கொரோனாக் காலத்தில் கைத்தொலைபேசி ஊடான கற்றல் நடவடிக்கையும் இதனை ஊக்குவித்துவிட்டது. இன்னொரு மாணவனுடன் பழகுவது, ஆசிரியருடன் மனந்திறந்து உரையாடுவது, இணைப்பாடவிதானச்செயற்பாடுகள், விளையாட்டுக்களில் பங்கேற்றல் என்பன குறைவடைந்து, தான் உண்டு தன் பாடுண்டு என்று இளைய சமூகம் தனியனாக மாறுவதன் விளைவுகளே மாணவர்களைச் சீரழிக்கும் ஏனைய புறக் காரணிகளுக்குள் அவர்களை இலகுவில் சிக்கிக் கொள்ளச் செய்கின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஆண்கள் பாடசாலையின் மாணவன் ஒருவன் தவறான முடிவு எடுத்து உயிர்மாய்க்க முயன்றிருக்கின்றான். அதன் பின்னால் பல்வேறு விடயங்கள் விசாரணையில் கண்டறியப்பட்டுக்கொண்டிருக்கின்றன. முக்கியமாக அந்த மாணவன் கல்வியில் சிறந்து விளங்கியிருக்கின்றான். ஆனால், உளரீதியாக ஆற்றுப்படுத்தல் தேவைப்பட்ட ஒருவனாக இருந்திருக்கின்றான். அவனுக்கு உளரீதியான பாதிப்பை ஏற்படுத்தியமைக்கான காரணங்களில் ஒன்றாக பலவந்தமான தன்பாலினச் சேர்க்கை இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. மருத்துவமனை வட்டாரங்கள் அது தொடர்பில் இன்னும் தீவிரமான விசாரணையை முன்னெடுத்து வருகின்றன, இது ஒரு சம்பவம் மாத்திரமே.

அந்த மாணவன் மனஅழுத்தத்துக்கு உள்ளாகி அது தொடர்பில் வெளியில் சொல்ல முடியாத சூழல் இருக்கின்றது என்றால் பெற்றோருக்கு உள்ள அதேயளவு பொறுப்பு பாடசாலைக்கும் இருக்கின்றது. அதற்காக பாடசாலை எதுவுமே செய்யாது வாளாதிருப்பதாகச் சொல்லவில்லை. ஆனாலும், பாடசாலையில் கற்கின்ற மாணவர்கள் தொடர்பில் அவர்களது உளநலன்கள் தொடர்பில் கவனம் செலுத்தியாகவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. பாடசாலைகளில் உளவள ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். ஆனாலும், பாடசாலை மாணவர்களால் வெளிச்சொல்ல முடியாதளவுக்கு அவர்களுக்கு மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் அளவுக்கு விடயங்கள் இருக்கின்றன என்றால், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான இடைவெளி அதிகமாகிவிட்டதும் காரணம் எனலாம்.

இந்த இடைவெளியை மேலும் அதிகரிக்கும் வகையிலேயே இங்கு விடயங்கள் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன. ஒரு புறம் பெற்றோர் இயந்திரகதியில் ஓடிக்கொண்டிருக்க, ஆசிரியர் – மாணவர்கள் உறவுநிலை இடைவெளி அதிகரிக்க, வழி நடத்தப்பட ஆளில்லாமல் மாணவர்கள் தடுமாறிக்கொண்டிருக்கின்றார்கள். இதன் பாதிப்புக்களை இப்போது எமது சமூகம் கண்டுகொண்டிருக்கின்றது. இளம் சமூகத்தை நல்வழிப்படுத்தும் பொறுப்பை, ஆற்றுப்படுத்தும் கடமையை தவறவிட்டுவிட்டு, சீரழிவு பற்றி கவலைப்பட்டுக்கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை.



### வெளிநாட்டுப் பயணங்களின்போது

# அமைச்சர்கள், எம்.பி.க்களுக்கு அரசாங்கச் சலுகைகள் ரத்து!

கொழும்பு, மார்ச் 17

**அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் பிரதிநிதிகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது, வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் என்பன ரத்துச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.**

சில வகைக் கொடுப்பனவுகள் குறைக்கப்பட உள்ளதாகவும், சில ரத்துச் செய்யப்பட உள்ளதாகவும் தெரியவருகின்றது. இதன்படி, அரசாங்கத்தின் சார்பில் கல்விச் சுற்றுலாக்கள், பயிற்சிகள் மற்றும் கூட்டங்கள் போன்றவற்றுக்கு வெளிநாடு செல்லும் தரப்பினருக்கு நாளாந்தம் வழங்கப்படும் 40 டொலர். கொடுப்பனவு 25 டொலராகக் குறைக்கப்படுகின்றது. இதுவரையில் 30 நாள்களுக்கு வழங்கப்பட்ட இந்தக் கொடுப்பனவு 15 நாள்களுக்கு மட்டுப்படுத்தப்பட உள்ளது.

நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்து மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணங்களில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளுக்கு 15 நாள்களுக்கு 75 டொலர் என வழங்கப்பட்ட கொடுப்பனவுத்தொகை இனி 10 நாள்களுக்கு 40 டொலர் என குறைக்கப்படவுள்ளது. மேலும் அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்களுக்கு அதிகாரபூர்வ வெளிநாட்டுப் பயணங்களின்போது வழங்கப்படும் பொழுதுபோக்கு கொடுப்பனவுத் தொகையான 750 டொலர் ரத்துச் செய்யப்படவுள்ளது. (ம-இ)

## வாகன இறக்குமதி தொடர்பில் மத்திய வங்கியுடன் பேச்சு!

கொழும்பு, மார்ச் 17

இலங்கைக்குள் மீண்டும் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருடன் வாகன இறக்குமதியாளர்கள் பேச்சு நடத்தியுள்ளனர்.

இது தொடர்பில் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சாந்த கமகே ஊடகமொன்றுக்கு தெரிவித்ததாவது:

இலங்கைக்குள் மீண்டும் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருடன் கலந்துரையாடியுள்ளோம். இது தொடர்பில் தம்மால் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது என்று மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். எனவே இது தொடர்பில் நிதி அமைச்சுடன் கலந்துரையாடவுள்ளோம் - என்றார். (ம-இ)

## 36,000 தொன் ரி.எஸ்.பி. உரம் வந்தடைந்தது

கொழும்பு, மார்ச் 17

எதிர்வரும் சிறுபோக நெற்செய்கைக்குத் தேவையான ரி.எஸ்.பி. உரமான சேற்று உரம் ஏற்றிய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது.

36 ஆயிரம் மெற்றிக் தொன் சேற்று உரம் அடங்கிய கப்பலே நேற்று அதிகாலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியவற்றின் பங்களிப்பில் இந்த உரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த உரத்தை அனைத்து விவசாயிகளுக்கு ஒரு ஹெக்ரேயருக்கு 55 கிலோ வீதம் இலவசமாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ச-இ)

**நாளை** 18.03.2023 சனிக்கிழமை பங்குனி 04

சுபநேரம் : 03.19 - 04.49
ராகுகாலம் : 09.19 - 10.49

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டணம் செலுத்தப்படாததால் விளம்பரத்தட்டி அகற்றப்பட்டது

சாவகச்சேரி, மார்ச் 17

சாவகச்சேரி நவீன சந்தைக் கட்டட கூரைப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த விளம்பரத்தட்டி நகரசபையால் கடந்த செவ்வாய்க்கிழமை அகற்றப்பட்டது.

விளம்பரத் தட்டிக்குரிய கட்டணம், வருடாவருடம் செலுத்தப்படவேண்டும். எனினும் விளம்பரத் தட்டிக்குரிய இந்த வருடக் கட்டணம் செலுத்தப்படாததால் நகரசபையினரால் அகற்றப்பட்டது. (ஓ-14-9)

## மட்டுவில் கத்தரிக்காய் விலை சடுதியாக சரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 17

மட்டுவில் கத்தரிக்காயின் விலை திடீரென சரிந்துள்ளதாக என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

மட்டுவில் தோட்டங்களில் செய்கையாளர்களால் பயிரிடப்பட்ட மட்டுவில் கத்தரிக்காய் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

அதன்காரணமாக அதிகளவில் சந்தைகளுக்கு கத்தரிக்காய் வந்துசேர்கின்றது.

கொடிகாமம், சாவகச்சேரி சந்தைகளில் மட்டுவில் கத்தரிக்காய் கிலோ 100 ரூபா முதல் 140 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## சமுர்த்திக்குழுவின் பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 17

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி நிறைவேற்றுக் குழுவின் பொதுக்கூட்டம், பிரதேசசெயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக கொடிகாமம் வலயத்தைச் சேர்ந்த ச.சாந்தினி தலைமையில் 7 பேர் கொண்ட நிறைவேற்றுக் குழு தெரிவு செய்யப்பட்டது.

நிறைவேற்றுக் குழுவின் உப தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தென்மராட்சி பிரதேச செயலர், உதவிப் பிரதேசசெயலர், கணக்காளர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், சாவகச்சேரி, கொடிகாமம், வரணி, கைதடி ஆகிய சமுர்த்தி வலயங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஓ-14-9)

## பொருள்களின் விலையில் தளம்பல்: வர்த்தர்களால் கொள்வனவில்லை

### மொத்த விற்பனையாளர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 17

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருவதையடுத்து பொருள்களின் விலைகளில் தளம்பல் உருவாகியுள்ளது. இதனால் யாழ். நகர வர்த்தகர்கள் பொருள்களைக் கொள்வனவு செய்ய பின்னடித்து வருகின்றனர் என மொத்த விற்பனையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த வாரம் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடைந்தது. இதனால் பல்வேறு பொருள்களின் விலைகளில் சரிவு ஏற்படும் என எதிர்வுகூறப்படுகிறது.

எதிர்வரும் பண்டிகைக்காலத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலை மேலும் குறைவடையும் என வர்த்தக வாணிப நிலையங்கள் சுட்டிக்காட்டுகின்றன. டொலரின் பெறுமதி மற்றும் பணவீக்கத்தின் அடிப்படையில் இந்த நிலைமைகள் அவதானிக்கப்படுகின்றன.

இந்தநிலையில் பொருள்களின் விலையில் சரிவு ஏற்படும் என்ற அறிகுறியை அடுத்து வடக்கிலிருந்து கொழும்புக்குச் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்ய வர்த்தகர்களால் தயக்கம் காட்டப்படுகிறது.

அவர்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் தயக்கம் காட்டி வருவதால் நகரின் வர்த்தக நடவடிக்கைகளில் தளம்பல் நிலை உருவாகியுள்ளதுடன் பொருள்களின் விலையில் நாளாந்த விலைத் தளம்பலும் ஏற்பட்டுள்ளது என வர்த்தக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச- 17)

## ஆன்மீகக்கல்வி நடைபெறும் நேரம் பிரத்தியேக வகுப்பை நடத்தாதீர்கள்

### மன்னாரில் கவனவீர்ப்பு

மன்னார், மார்ச் 17

ஆன்மீகக்கல்வி நடைபெறும் நேரத்தில் பிரத்தியேக வகுப்புகளை நடத்தவேண்டாம் எனக் கோரி கவனவீர்ப்புப் போராட்டமொன்று மன்னார் மாவட்டச்செயலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் அறநெறிப் பாடசாலைகளில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் ஆன்மீக கல்வி வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. அதேநேரத்தில் கல்வி நிலையங்களிலும், சில பாடசாலைகளிலும், வீடுகளிலும் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெற்று வருவதால் அறநெறிப் பாடசாலைக்கு வரும் மாணவர்களின் ஆன்மீகக் கல்வியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் சில மாணவர்கள் இதன் காரணமாக அறநெறிப் பாடசாலைக்கு வருவதில்லை.

இதனைக் கருத்திற்கொண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் 11 மணி வரை நடைபெறும் பிரத்தியேக வகுப்புக்களை நிறுத்தி ஆன்மீக கல்வி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரி மன்னார் இந்து மத பீடத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.



"ஞாயிறு தினங்களில் பிரத்தியேக வகுப்புக்களை நிறுத்துங்கள்", "இளைய தலைமுறைக்கு ஆன்மீக கல்வி முக்கியம்", "அறநெறிப் பாடசாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்புக்கள் வேண்டாம்", "ஆன்மீக கல்வியை ஊக்குவிப்போம்" உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத்தொடர்ந்து தமது கோரிக்கை அடங்கிய மனுவை வடமாகாண ஆளுநருக்கு வழங்குமாறு மன்னார் மாவட்டச்செயலகத்தில் மாவட்டச்செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல்லிடம் கையளித்தனர். (ஓ-14-56)

## வவுனியாக் கல்வாரி பாதயாத்திரை மன்னாரிலிருந்து ஆரம்பம்

மன்னார், மார்ச் 17

மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து வருடாவருடம் தவக்காலத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் வவுனியா கோமரசங்குளம் கல்வாரிக்கான பாதயாத்திரை நேற்று முன்தினம் புதன்கிழமை காலை ஆரம்பமாகியது.



மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நேற்றுக் காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆலயத்தில் இருந்து பல நூற்றுக்கணக்கான பக்தர்களுடன் பாதயாத்திரை ஆரம்பமானது.

பாதயாத்திரையில் செல்வோர் பெரிய கட்டு புனித அந்தோனியார் ஆலயம், வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயம் ஆகியவற்றில் தங்கி நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை வவுனியாகோமரசன்குளம் கல்வாரியை சென்றடையவுள்ளனர்.

அங்கு திருச்சிலுவைப் பாதை மற்றும் திருப்பலி பூசைகளில் கலந்து கொள்வார்கள்.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான பாதயாத்திரையில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், மன்னார் தூய செபஸ்தியார் பேராலய பங்குத் தந்தை அருட்தந்தை அகஸ்ரின் புஸ்பராஜ், வாழ்வுதயம் இயக்குநர் அருட்தந்தை அன்ரனி அடிகளார் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஓ-14-213)

## சிப்தொற நிதி வழங்க விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, மார்ச் 17

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினர், 2022 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்புகளில் இணைந்துள்ள சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு சிப்தொற கல்வி நிதி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரியுள்ளனர்.

அதன்படி தென்மராட்சி பிரதேச சமுர்த்தி நிவாரண உதவிகள் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த, கடந்த 2021 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று உயர்தர வகுப்புகளில் இணைந்துள்ள மாணவர்கள் தமது பிரிவு சமுர்த்தி அலுவலரிடம் உரிய படிவத்தைப் பெற்று உடனடியாக விண்ணப்பிக்குமாறு அறிவித்துள்ளனர்.

சமுர்த்தித் திணைக்களத்தால் வருடா வருடம் சமுர்த்தி உதவிகள் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த. உயர்தர வகுப்புகளில் இணைந்துள்ள மாணவர்களுக்கு மாதாந்தம் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் கல்வி நிதி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-14-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு நன்கொடையாளர்களின் உதவியுடன் யாழ்.போதனா மருத்துவமனையில் இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
இதற்கான நோயாளர்களைத் தெரிவுசெய்யும் மூன்றாவது கண்பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அனலைதீவு பிரதேச மருத்துவமனை, அம்பன் பிரதேச மருத்துவமனை மற்றும் மருதங்கேணி பிரதேச மருத்துவமனை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.
எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.
(ஒ-14-20)



# மாணவர்களுக்கு பசும்பால் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 17
சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையில் போஷாக்கு வழங்கும் திட்டத்தின்கீழ் நேற்று வியாழக்கிழமை பாடசாலை மாணவர்களுக்கு பசும்பால் வழங்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
யாழ். வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் மற்றும் சித்தன் கேணி பிளவத்தை அ.மி.த.க. ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு பசும்பால் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் நிகழ்வில் பங்கேற்றார்.
(ச-17)

# கசிப்புடன் ஒருவர் சுழிபுரத்தில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 17
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் வறுத்தோலைப் பகுதியில் கசிப்புடன் குடும்பத் தலைவர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சுழிபுரத்தில் நபரொருவர் கசிப்பை உடைமையில் வைத்திருக்கின்றார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
கைது செய்யப்பட்ட சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த நபரிடம் ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புக் கைப்பற்றப்பட்டது.
அத்துடன் அவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
(ஒ-14-125)

# மாட்டிறைச்சியுடன் ஒருவர் கைதானார்!

யாழ்ப்பாணம், மார்ச் 17
புங்குடுதீவு 12ஆம் வட்டாரப் பகுதியில் மாட்டிறைச்சியுடன் நபரொருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 20 கிலோகிராம் மாட்டிறைச்சியுடன் 57 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார்.
கைப்பற்றப்பட்ட மாட்டிறைச்சி உணவுக்கு உகந்தது இல்லை என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
அதனையடுத்து சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
(ஒ-14-23)

# தவறான முடிவெடுத்து முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 17
ஊர்காவற்றுறை நாரந்தனை தெற்குப் பகுதியில் தவறான முடிவெடுத்து முதியவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.
செபஸ்தியன் கிரேசிஸ் (வயது61) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
உயிரிழந்த முதியவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.
மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
(ஒ-14-23)

# ஆண்டு நிறைவை முன்னிட்டு பரிசளிப்பும் இலக்கிய விழாவும்

வவுனியா, மார்ச் 17
கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு உள்ளம் சஞ்சிகை வழங்கும் பொற்கிழி பரிசளிப்பும், இலக்கிய விழாவும் நாளைமறுதினம் ஞாயிறுக்கிழமை மாலை 3.30 மணிக்கு வவுனியா மாநகரசபைக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
விழாவில் தமிழகத்தின் பிரபல இலக்கியவாதி, கதைசொல்லி பவா செல்லத்துரையின் உரை உட்பட பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அத்துடன்காலை 8.30 மணி முதல் மாபெரும் ஓவியக் கண்காட்சியும், புத்தக விற்பனையும் இடம்பெறும் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
(ஒ-14-110)

விநியோகஸ்தர்கள் தேவை
கிளிநொச்சி
AJ MASALA
மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் எமது மசாலா உற்பத்தி நிறுவனமானது தற்போது கிளிநொச்சி மாவட்டத்திற்கு புதிய விநியோகஸ்தர்களை எதிர்பார்க்கிறது.
தகைமைகள்
◆ வங்கி உத்தரவாதம் 1 மில்லியன்.
◆ சொந்த வாகனம் / போக்குவரத்து வசதி கொண்டிருத்தல்
◆ 7% விநியோகஸ்தர் மார்ஜின்
◆ பண கொள்வனவிற்கு மேலதிக 2%
◆ கம்பெனி விற்பனை பிரதிநிதி
More Info Call Us:
0777 32 55 33 / 077 798 9163



National Dangerous Drugs Control Board
வட. மாகாணத்தில் பெரும் பிரச்சனையாக மாறிவரும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக மாணவர்களை ஒன்றிணைக்கும் திட்டம்
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின்
போதைப்பொருளுக்கு எதிரான மாணவ அணி - செயலமர்வு




திகதி
19.03.2023@9.00AM
இடம்
யாழ் இந்துக் கல்லூரி
ஒன்றாக இணைவோம் – குரல் கொடுப்போம் – செயல்படுவோம் இல்லாதொழிப்போம்
போதைப் பொருள் அச்சுறுத்த இல்லாத சமூகத்தை எதிர்கால சந்ததிக்கு கையளிப்போம்
ஒழுங்கமைப்பு உதவி
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை,
வட. மாகாணக் கல்வித் திணைக்களம்
தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1993 இல் பிறந்த ஜேர்மனியில் வசித்து வரும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (V) கிரகபாவம் - 21 3/4. கல்வி- ICT Software Engineer செவ்வாய்க் குற்ற மற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. (ஜேர்மனியில் மணமகள் உள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.)

**074 36 70 513**
**Whatsapp-072 16 29 825**

(CS 23913)(5/6)

## கடை வாடகைக்கு

129C, K.K.S. வீதியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு.

**077 222 8312**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துக்கு முன்பாக 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**076 432 4808**

## மரண அறிவித்தல்

# செல்லப்பா பரஞ்சோதிநாதன்

(முன்னாள் நகரசபை ஊழியர் - சாவகச்சேரி)



யாழ்.நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கனடா Torantoவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா பரஞ்சோதி நாதன் கடந்த (10.03.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான நடராஜா - விசாலாட்சி தம்பதி களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவமலர் (மலர்) அவர்களின் ஆருயிர்க் கணவரும், காலஞ் சென்ற தவமணியின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற பரமசாமியின் அன்பு மைத்துனரும் ஜசிந்தா (சுபோ - நோர்வே), கஜதீபன் (தீபன் - கனடா), பிரதீபன் (ரஜீவ் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவனேந்திரன் (சங்கர் - நோர்வே), பிருந்தா (கனடா), ஆஷா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்சயா, ஜெயனி (நோர்வே), யஷ்மிதா, டனிஷா (கனடா), நிதுஷிகா, டக்ஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், சாந்தநாயகி, செல்வமணி, தர்மேந்திரன், காலஞ்சென்ற அருள்மணி, கிரிஜா, காலஞ்சென்ற ஜெயந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கனகரத்தினம், கணேசலிங்கம், சறோஜாதேவி, மல்லிகாதேவி, தனேஸ்வரன், காலஞ்சென்ற சுசீலாதேவி, மதனதாஸ், ரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை கனடா வில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குறிப்பு:- நாளைமறுதினம் (19.03.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (நுணாவில் மேற்கு, சாவகச்சேரி) அஞ்சலி நடைபெறும்.**

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(CS/23904)4,6

தகவல்:
குடும்பத்தினர்.

**077 606 2746 - நகுலன், 077 077 5450 - இந்தி, 077 818 7910 - சிந்து, +1416 300 8481 - தீபன், + 164 79873752 - றஜீவ்**

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று (17.03.2023) முதல்

சித்திரைப் புத்தாண்டு

# ஜவுளிப் பண்டிகை

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான
தலைசிறந்த ஆடைகள்

- பட்டுச்சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- டொப், புரொக்
- சேட் மற்றும்
- சிறுவர் சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள்.



இது பிரமாண்ட ஜவுளித்துறையின் சாம்ராஜ்யம்

# இந்தியன் செலக்ஷன்

காலம்: 17.03.2023 முதல் 14.04.2023 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

## மரண அறிவித்தல்

பிறப்பு
24 . 01 . 1937



இறப்பு
14 . 03 . 2023

# பொன். நாகமணி பூரணம்

கல்வயலைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்.நாகமணி பூரணம் 14.03.2023 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பொடி சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னன் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன். நாகமணியின் மனைவியும், கருணைநாதன் (கரன் – கனடா) அவர்களின் பாசமிகு தாயாரும், தீபாவின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சின்னத்துரை, காலஞ்சென்ற பொன்.நல்லையா, மற்றும் பொன்.கந்தையா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வசந்தாதேவி, சிவபதி ஆகியோரின் சகலியும், சுதாகரன், டினேஸ், பிரியா, கார்த்திகா, அனுசுதன், அனுரதன் ஆகியோரின் பெரிய தாயாரும், சித்தாத், கரித், பூமிகா, வீணா, டிசானா, டிசான் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2023) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் சின்னத்து இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

**076 250 6688**

(CS/23909)4,6

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
24 . 01 . 1937



மறைவு
14 . 03 . 2023

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய ஸ்தாபகர்
காலஞ்சென்ற பொன் நாகமணி அவர்களின் மனைவி

# நாகமணி பூரணம்

கல்வயல் பெற்றெடுத்த காவிரியே! மட்டுவிலை மறுவீடாய் கொண்ட தாயே!
ஊருக்காய் உழைத்த உத்தமரின் பெயருக்குப் பின்னிருந்த
பெருந்தகையே! சேவையின் சிற்பிக்கு அருகிருந்து சேவைகள் புரிந்திட்ட
நாயகியே! நல்ல இல்லறம் நிறைவு கொண்ட நல்லறம் வள்ளல்
அவர்க்களித்த வானகியே! அறத்தின் அருகிருந்த அருந்ததியே!
கணவருக்குத் துணை நின்ற குணநிதியே!

அகல்விளக்காய் வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS/23905)4,6

**வளர்மதி சனசமூக நிலையமும்
அதன் துணை அமைப்புக்களும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் நிறுத்தப்படுமா?

## பதிவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதேசசெயலகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 17

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை ஓய்வூதியர்களுக்கு 2023 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியம் வழங்குவது நிறுத்தப்படவுள்ளதா? என கேள்வி எழுப்பப்படுகின்றது.

ஓய்வூதியர்களுக்கு பிரதேச ஓய்வூதிய அலகால் அனுப்பப்படும் உயிர்வாழ் சான்றிதழ் படிவத்தை ஜனவரி தொடக்கம் மார்ச் வரையான காலப்பகுதியில் பூர்த்தி செய்து அனுப்பப்படவேண்டும்.

இதுவரை காலமும் வீட்டுக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும் படிவத்தை பூர்த்தி செய்து கிராம அலுவலரிடம் ஒப்படைத்தாலோ அல்லது தபால்மூலம் அதனை அனுப்பி வைத்தாலோ போதுமானதாக இருந்துவந்தது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியையடுத்து 2016ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற ஓய்வூதியர்கள் தமது பிரிவு கிராமஅலுவலரிடமும் வழங்கப்பட்ட படிவத்தில் நேரில் சென்று கையொப்பமிடுமாறும் 2016ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வு பெற்றவர்கள் வங்கிக் கிளைகளில் விரல் அடையாளம் இடுமாறும் ஓய்வூதியத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்பிரகாரம் அந்தந்தப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் கையொப்பத்தை இட்டுள்ளனர். வெளிநாடுகளிலிருந்து படிவத்தில் கையொப்பமிட வந்த ஓய்வூதியர்களின் பதிவுகள் பிரதேச ஓய்வூதிய அலகின் பட்டியலில் காணப்படவில்லை.

அதனையடுத்தே வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது 2023ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்படவுள்ளதா? என கேள்வியெழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக பிரதேச செயலகங்களுடன் தொடர்புகொண்டபோது, ஓய்வூதியத் திணைக்களத்தின் அறிவிப்பின் பிரகாரம் வெளிநாடுகளில் தங்கியுள்ள ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியப் பதிவுகள் நிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-9)

# வர்த்தக நிலையங்களுக்குரிய கட்டணத்தைச் செலுத்துங்கள்

## சாவகச்சேரி நகரசபை அறிவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 17

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இயங்கும் வர்த்தக நிலையங்கள், தொழில் நிலையங்கள் போன்றவை இந்த வருடத்துக்குரிய வியாபார வரி மற்றும் வியாபார உத்தரவுப் பத்திர கட்டணம் ஆகியவற்றை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி உரிய சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுமாறு நகரசபையினர் அறிவித்துள்ளனர்.

உள்ளூராட்சிசபை எல்லைக்குள் நடத்தப்படும் வர்த்தக மற்றும் தொழில் நிலையங்கள், ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய தொகையைச் செலுத்தி அதற்குரிய சான்றிதழைப் பெறவேண்டும்

எனவே சபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள், தொழில் நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணத்தை சபை அலுவலகத்தில் செலுத்துமாறும் குறித்த காலப்பகுதிக்குள் கட்டணத்தைச் செலுத்தத் தவறும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த வருடத்துக்குரிய துவிச்சக்கரவண்டிக் கட்டணத்தைச் செலுத்தி இலக்கத்தகட்டைப் பெற்று துவிச்சக்கரவண்டிகளில் பொருத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)

# சிறுபான்மையினருக்காகவும் போராட தயாரெனின் நாம் கரம் கோர்க்கலாம்

## யாழ்.பல்கலை மாணவர்கள் பதிலுக்கு மனோ கணேசன் எம்.பி. பாராட்டு

கொழும்பு, மார்ச் 17

நாட்டின் சிறுபான்மையின மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களையும் புரிந்துகொண்டு அவற்றை பொதுப் போராட்டத்தில் இணைத்துக்கொள்ள சிங்கள அரசியல் கட்சிகள், பெரும்பான்மையின இளைஞர் அமைப்புக்கள் தயாராகாதவரை நாடு விடிவு பெறாது. அனைத்து பல்கலைக்கழக ஒன்றியத்துக்கு யாழ். பல்கலை மாணவர்கள் முன்வைத்த பதலளிப்பு பாராட்டுக்குரியது.

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

பயங்கரவாத தடை சட்டம் என்பதே தமிழருக்கு எதிராக ஏறக்குறைய 44 வருடங்களாக மேலாக பிரயோகிக்கப்பட்டு தமிழ் மக்கள், தமிழ் மாணவர்கள், தமிழ் இளைஞர்கள் காவுவாங்கப்பட்டு வருகின்றனர். எத்தனையோ குடும்பங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் அநாதரவாக்கப்பட்டுள்ளது. இதற்கெதிராகவும் தற்போதுவரை குரலெழுப்பி போராடி வருகின்றனர்.

2006-2009 காலப்பகுதியில் கொழும்பில் இந்தச் சட்டத்தை பயன்படுத்தி தமிழர்கள் நாய்பிடிப்பது போன்று வெள்ளை வானில் கடத்தப்பட்டார்கள். அதனை எதிர்த்துப் போராடிய என்னையும் கைது செய்தார்கள். தமிழர்கள் 40வருடங்களுக்கு மேல் தேசிய, சர்வதேச ரீதியாக இந்தச் சட்டத்தை எதிர்த்து போராடியதால் இன்று, ஐ.நா. மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கவனத்துக்கும் வந்துள்ளது.



இப்போது திடீரென தூக்கத்திலிருந்து எழுந்தமை போன்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் யாழ்ப்பாணம் சென்று அங்கே யாழ். பல்கலைக்கழக மாணவர்களிடம் "நாம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்க்கிறோம்- போராடுகிறோம்- நீங்களும் சேர்ந்துகொள்ளுங்கள்" எனக் கூறுகின்றனர். இது நகைப்புக்குரியதாகும்.

அனைத்து , அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு யாழ் பல்கலை மாணவர் ஒன்றிய இளைஞர்கள் அளித்த பதில் சிறந்த பதிலடியாகும். அது பாராட்டுக்குரியது.

அண்மையில் நடந்து முடிந்த 'கோத்தா கோ கம' போராட்டத்தின் பின் என்னை வந்து சந்தித்த அரகல போராட்டக்காரர்களிடமும்

இதனையே குறித்தேன்.

பயங்கரவாதச் சட்டத்தின் வரலாற்றை தெரிந்துக்கொண்டு, சிறைகூடங்களில் இருக்கும் எம்மவருக்காகவும் போராட தயார் என்றால். கசப்பான கடந்த காலத்தை மறந்து விட்டு கரம் கோர்க்க தயார்" என்று நான் பலமுறை சொல்லியுள்ளேன் . சிங்கள அரசியல் கட்சிகள், சிங்கள மாணவர் இளைஞர் அமைப்புகள் எமக்குரிய தீர்வுக்கு குரல்கொடுக்க தயாராகாதவரை இந்த நாடு விடிவு பெறாது- என்றார். (ச-இ)

# உயர்கல்வி வாய்ப்பை விஸ்தரிக்க கட்டமைப்பு மாற்றங்கள் அவசியம்

## நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 17

இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புக்களை விஸ்தரித்தல் மற்றும் அரசு அல்லாத உயர்கல்வித் துறைக்குத் தேவையான கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பில் நாடாளுமன்ற விசேட குழுக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற விசேட குழுக் கூட்டம் அதன் தலைவர் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தலைமையில் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் கூடியது. இந்தக் கூட்டத்தில் உயர்கல்வித் துறையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தேசிய கல்வி ஆணைக்குழு, கல்வி அமைச்சு உள்ளிட்ட அரச அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்வேறு பல்கலைக்கழகங்களின் பிரதானிகள் உள்ளிட்ட உயர்கல்வித் துறையுடன் தொடர்புபட்ட நிபுணர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

உயர்கல்விக்கான வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கு அடிப்படைக் கட்டமைப்பு மாற்றங்கள் தேவைப்படுவதாக குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. தேவையான அமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளும்போது மேலதிகமான மாணவர்களை உள்ளீர்க்கமுடியும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

இது தவிர, தேசிய கல்வி ஆணைக் குழு, கல்வி அமைச்சின் அரசு அல்லாத உயர்கல்வித்துறைப் பிரிவு மற்றும் கல்வி அமைச்சின் விசேட ஆலோசகர் உள்ளிட்ட பலரும் குழு முன்னிலையில் தமது பரிந்துரைகளை முன்வைத்தனர்.

அதற்கமைய இயங்கிவரும் அரசாங்கப் பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள குழு தீர்மானித்தது. (ச-இ)

# கசிப்புடன் நபர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 17

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுன்னாகம் ஊரெழு மேற்குப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய 40 வயதான நபரொருவர் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,125)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு கரவெட்டிப் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 08ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.
மேற்படி சமாசத் தலைவர் தி.வரதராசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செஞ்சிலுவைச் சங்க ஆதரவில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் மகளிருக்கான உதவி வழங்கலும் இடம்பெற்றது.
(ய-66)



திருமறைக் கலாமன்றத்தின் மகளிர் அவையினரின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு இளவாலை திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது.
(ய-66)



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.
(ச-17)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் வாராந்த நிகழ்வுகள் வரிசையில் சிறப்பு இன்னிசைக் கச்சேரி நிகழ்வு யாழ்.தொண்டைமானாறில் அமைந்துள்ள மேற்படி ஆச்சிரம மண்டபத்தில் கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்புற இடம்பெற்றது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலாவித்தகர் கு.நக்கீரன் கலந்துகொண்டு தெய்வபக்திப் பாடல்களைப் பக்க வாத்திய சகிதம் இசைத்தார்.
(ய-66)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையில் சங்கானை பிரதேசசெயலகத்தின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் தையல் மற்றும் அழகுக்கலை கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களின் உற்பத்தி பொருள்களின் கண்காட்சி கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
(ய-20)



யாழ். அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.
(ய)


## மரண அறிவித்தல்

### சிமியோன் மேரிமாக்கிறேற்

தோற்றம்
06 • 01 • 1929



மறைவு
14 • 03 • 2023

நாரந்தனை வடக்கு, அம்பலவாணர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிமியோன் மேரிமாக்கிறேற் கடந்த (14.03.2023) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நாரந்தனை வடக்கு,
அம்பலவாணர் வீதி,
ஊர்காவற்றுறை.

076 450 5161

## கண்ணீர் அஞ்சலி

### தெய்வேந்திரம் பவானியம்மா
(இராசையா) (அம்பிகா)



அன்பான அத்தையே!
அழியாத உன் நினைவுகள் பலகதைகள்
சொல்லிச் செல்கின்றன
உமை இழந்து கதறித் துடிக்கும்
உம் செல்வங்களுக்கு
அருகிலிருந்து ஆறுதல் கூற முடியவில்லை
கண் இமைக்கும் நேரத்தில்
எமை விட்டுச் சென்று விட்டீர்.
எப்போ காண்போம் இனி உமை
ஆறாத துயரத்துடன் எம் இதய அஞ்சலிகளை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

த.இலட்சுமணன் + இ.நித்தியலட்சுமி
குடும்பத்தினர்.
யாழ்ப்பாணம்.

(CS 23916) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயமான 3 சிறுமிகளும் பருத்தித்துறையில் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 17

உரும்பிராயிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் இருந்து காணாமற்போயிருந்த 3 சிறுமிகளும் கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

உரும்பிராயிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் இருந்து 14, 15 மற்றும் 16 வயதுடைய சிறுமிகள் காணாமற்போயிருந்தனர் என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் அந்தச் சிறுமிகளை பருத்தித்துறைப் பகுதியில் மீட்டுள்ளனர். சிறுவர் இல்லத்தில் வசிப்பதற்கு விருப்பம் இன்மையாலேயே அங்கிருந்து சென்றோம் என்று சிறுமிகள் தங்கள் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் சிறுமிகள் மீண்டும் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-எ-27)

## தீர்மானங்கள்...

எடுக்கின்றது என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள மத்திய வங்கி சட்டவரைவு மூலம் அரசியல் தலையீடுகள் இன்றி மத்திய வங்கிகளின் பணிகளைச் சுயாதீனமாக முன்னெடுக்கமுடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-எ-இ)

## அரசின்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கனேடியத் தூதுவர் மற்றும் இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள இரா.சம்பந்தன் எம்.பி.யின் வீட்டுக்கு நேற்று மாலை 4.30 மணிக்குச் சென்ற இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ், சம்பந்தனுடன் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தினார். அதன்பின்னர் மாலை 5.30 மணிக்குச் சென்ற இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் போல் ஸ்டீபன்ஸும் சம்பந்தனுடன் ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்புக்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கான புதிய கனேடியத் தூதுவரையும், புதிய அவுஸ்திரேலியத் தூதுவரையும் இன்று வியாழக்கிழமை (நேற்று) சந்தித்தோம். இந்தச் சந்திப்பு மிகவும் திருப்திகரமாக இருந்தது.

இன்றைய அரசியல் நிலைமை, அரசியல் தீர்வு சம்பந்தமான நிலைமை, பொருளாதார நெருக்கடி நிலைமை, நாட்டை விட்டு பெருமளவிலான மக்கள் வெளியேறும் நிலைமை உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பில் பேசினோம்.

தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கை பௌத்த - சிங்களமயமாக்கும் நோக்குடன் அரசு செயற்படுகின்றமை, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காமல் அரசு இழுத்தடிக்கின்றமை தொடர்பிலும் பேசினோம்.

அரசு கடும் போக்குடன் செயற்படுவதால் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் தமிழர் தாயக ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவும், அரசியல் தீர்வை வென்றெடுக்கும் எம்மாலான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். இந்தக் கருமம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இதற்கு சர்வதேசநாடுகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் கனேடிய, அவுஸ்திரேலியத் தூதுவர்களிடம் எடுத்துரைத்தோம்.

அதேவேளை, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்த இலங்கை அரசுக்குச் சர்வதேச நாடுகள் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினோம்" - என்றார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.யும் கலந்துகொண்டார்.

(அ-எ,22)

## ஒப்புக்கொண்ட...

கள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அரச அச்சகத் திணைக்களத் தலைவர் கங்கானி லியனகே இது தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக நேற்று அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தபால் மூல வாக்கெடுப்பு மற்றும் பொது வாக்கெடுப்பு ஆகியவற்றுக்குத் தேவையான வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்கு தேவையான நிதியை வழங்கவேண்டும் என்று திறைசேரிக்கு கடந்த இரு வாரங்களில் இரண்டு தடவைகள் எழுத்து மூலமாக முன்வைத்த கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை.

மார்ச் மாதம் 9 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட அச்சிடல் பணிகளுக்கான நிதி முழுமையாகக் கிடைக்கவில்லை. நிதி விடுவிப்பு தொடர்பில் திறைசேரி ஒரு உத்தியோகபூர்வமாக அறிவிப்பை விடுக்கவேண்டும் என அரச அச்சகத் திணைக்களத் தலைவர் திறைசேரியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

நிதி கிடைப்பதில் தாமதம் காணப்படுவதால் தபால் மூல வாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் வாக்குச்சீட்டுக்களை ஒப்படைக்கமுடியாது என அரச அச்சகத் திணைக்களத் தலைவர் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தபால் மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 28, 29, 30 மற்றும் 31ஆம் திகதிகளில் நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. தபால்மூல வாக்குச்சீட்டு விநியோகப் பணிகள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் முழுமைப்படுத்தப்படவேண்டும். இந்தநிலையிலேயே குறித்த திகதிக்கிடையில் தம்மால் வாக்குச்சீட்டுகளை அச்சிட்டு வழங்க முடியாது என அரச அச்சகத்திணைக்களம் கைவிரித்துள்ளது. இதனால் தேர்தல் மீண்டும் தள்ளிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது. (அ-எ-இ)

## சரியும்...

346.33 ரூபாவாகவும் காணப்பட்டது.

யூரோ ஒன்றின் கொள்வனவுப் பெறுமதி 348.35 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 368.98 ரூபாவாகவும் காணப்பட்டது.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்வனவுப் பெறுமதி 397.49 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 419.44 ரூபாவாகவும் காணப்பட்டது.

அதேவேளை கொழும்பு, செட்டித்தெருவில் நேற்று தங்கத்தின் விலையிலும் அதிகரிப்புக் காணப்பட்டது.

24 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாவாகவும், 22 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபாவாகவும் காணப்பட்டது. (அ-எ-இ)

## கணக்கு...

கள் எட்டப்பட்டுள்ளன.

கால அவகாசம் முடிவதற்குள் உரிய அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறும் அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலில் இருந்து நீக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் எதிர்வரும் மார்ச் 23 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு கலந்துரையாடலை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## சீனச்சட்டி...

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. நுவரெலியாவிலிருந்து வந்த இருவரே இந்த நூதன மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டு சிக்கியுள்ளனர்.

நுவரெலியாவில் இருந்து வந்த இருவரும், முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரபுரத்தில் வியாபார பேரம் பேசல்களை நடத்தியுள்ளனர். சீனச்சட்டியிலான சிறிய உரல், உலக்கை, சில ஆபரணங்களுக்கு தங்க முலாம் பூசி அவை பண்டைய காலப் பொருள்கள் என்று கூறியுள்ளனர். ஆபரணங்கள் மன்னர் காலத்துக்குரியவை என்றும் கதை விட்டுள்ளனர்.

இவர்களின் இந்த மோசடி வியாபாரம் தொடர்பாக தகவல் அறிந்த சிறப்பு அதிரடிப் படையினர் சம்பவ இடத்துக்குச் சென்று சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர். அவர்களிடம் இருந்து பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட இருவரும் 22 மற்றும் 37 வயதுடையவர்கள். அவர்கள் தற்போது முள்ளியவளைப் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-எ-19)

## புதனன்று...

விளக்கக் கடிதம் கோரியுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அதில் 47 க்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் பங்கேற்றின. நாடளாவிய ரீதியில் பாடசாலைகளும் மூடப்பட்டன.

இந்தநிலையில், பாடசாலைக்கு சமுகமளிக்காத ஆசிரியர்களிடம் பாடசாலைக்கு வராமை தொடர்பாக யாழ். புறநகர் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் விளக்கக் கடிதம் கோரப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. (அ-எ-20)

## மருந்துத்...

உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளரும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும், தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையும் இந்த விசாரணைகளின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளுடன் தொடர்புடைய முறைப்பாட்டாளர்களும் பிரதிவாதிகளும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் சமுகமளிக்காமையால், இந்த விசாரணைகளை எதிர்வரும் 23 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது.

விரைவாக தலையீடு செய்து, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி, காலதாமதமின்றி மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்திக்க வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## உள்ளூராட்சி...

நேற்று அனுமதி வழங்கியது.

இந்த மனுவைத் தொடர்வதற்கு உயர் நீதிமன்ற நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன், சூரசேன காமினி, அமரசேகர மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய அமர்வு அனுமதி வழங்கியது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் திறைசேரி செயலாளர், அரசாங்க அச்சக அதிகாரி, பொலிஸ் மா அதிபர் மற்றும் பலரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

அரச அச்சகர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரின் நடத்தை உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான ஒருங்கிணைந்த முனைப்பை சுட்டிக்காட்டுகின்றது என்று மனுதாரர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியும் திறைசேரியின் செயலாளரும் 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி கடைசி நிமிடம் வரை தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீட்டில் சவாலான விடயம் இருப்பதாகச் சுட்டிக்காட்டவில்லை எனவும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகள் மனுதாரர்கள் மற்றும் இலங்கையின் குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதகமானவையாகும். எனவே அரச அச்சகர், பொலிஸ் மா அதிபர், நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு ஆகியோர் 19 ஆம் திகதிக்குள் தேர்தலை நடத்துவதற்கு சட்டப்படி உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதன் மூலம் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கத் தவறியுள்ளனர் என்றும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்

## சண்முகநாதன் சிவராஜா



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09.06.1948 | 28.03.2022 |

அன்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
அகிலத்தில் நாம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டியாய்
அமைந்தீர்கள். எம் ஏற்றங்களின் ஏணியாயிருந்து
எம் உயர்வுகளின் ஆதாரமாய் திகழ்ந்தீர்கள்
உங்கள் அன்பு முகம் அனுதினமும் எம் கண்முன்னே
தெரிகின்றது அப்பா. ஆண்டு ஒன்றென்ன பற்பல
ஆண்டுகள் கடந்தாலும் எம் நினைவில் பெரு வெளிதனில்
உங்கள் ஆத்மாவின் அர்த்தத்தை ஆத்மார்த்தமாய்
நிறைந்திருப்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

50/19, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்.

(CS 23985)4.6

**ஆற்றுமணல் சல்லி தேவை**

மொத்தமாக கொள்வனவு செய்யப்படும் 3 cube Dipper உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம்
**076 249 4592**

**இடிபாடுகள் விற்பனைக்கு**

நெல்லியடி நகரில் இடிபாடுகள் விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**076 249 4592**

**EMPTY சிலிண்டர் விற்பனைக்கு**

386. மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தில் EMPTY சிலிண்டர்கள் மலிவான விலையில் விற்பனைக்குண்டு.
**077 220 8432, 077 899 0291**

**ஆசிரியர் தேவை**

33ஆம் ஆண்டில் கேணியடி, கொக்குவில் மேற்கில் எமது நிறுவனத்துக்கு ஆசிரியர் தேவை. கணிதம், ICT, 10 & 11, ஆங்கிலம்.
**077 740 4883**

**DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்கும் கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S. Road, Jaffna.
**0777 55 45 28** / குறிப்பு: வேலையாட்கள் தேவை.

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 . 07 . 1996 | 15 . 03 . 2023 |

## மதியழகன் லக்சன்

சுன்னாகம் வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மதியழகன் லக்சன் நேற்றுமுன்தினம் (15.03.2023) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மதியழகன் - விமலாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், மதுசன் (Ever Cool Engineering Solution), சுபானு (தாதிய உத்தி யோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நிமலதாசனின் (HNB Finance - Jaffna) அன்பு மைத்துன ரும், காலஞ்சென்ற தர்மலிங்கம் - சரஸ்வதி, கைலாயபிள்ளை - பகவதி தம்பதிகளின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2023) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத் துக்கு கொண்டு செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 490 1874,**
**077 487 6592**

(CS/24000)4.6

தகவல்
**குடும்பத்தினர்.**



பரணி குடும்ப முன்பள்ளிகளின் மழலைகள் விளையாட்டு நிகழ்வு பரணி மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

பரணி குடும்ப இணைப்பாளர் திருமதி லோகிதன் கேதிகா தலை மையில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற முன்பள்ளிச் சிறார்களுக்கு வெற்றிக் கேடயங்கள், பரிசில்கள் வழங்கப்பட்டன.

(ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.